**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, UTHIRAMERUR.**

**OS. NO. 47/2019**

| | |
|---|---|
| Name: **கலைச்செல்வி** | Caste: |
| Father's Name:<br>Husband Name : **ருக்மணிகாந்தன்** | Calling: |
| Village:**.** | Religion: |
| Taluk: | Age: |
| The Oath was administered to the witness by Tr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 19.11.2025. | |

**<u>19.11.2025</u>**

**வா.சா. 1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வேலைக்கு ஏதேனும் சென்றேனா என்றால் இல்லை. வீட்டில் தான் இருந்து வருகிறேன். எனக்கு எந்த எந்த மொழிகள் எழுத படிக்க பேச தெரியும் என்றால் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகள் தெரியும். என்னுடைய தந்தை எப்போது இறந்தார் என்றால் 19.06.1985 ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் எப்போது இறந்தார்கள் என்றால் லட்சுமிநாராயணன் என்பவர் 2015 ம் ஆண்டு இறந்தார். கஜவள்ளி அக்டோபர் மாதம் 2017 ம் ஆண்டு இறந்தார். விநாயகம் ஜீலை மாதம் 2010 ம் ஆண்டு இறந்தார். தாவா சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 நான் தாக்கல் செய்த பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 பட்டாவில் எத்தனை நபர்கள் பெயர்களின் பெயரில் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் 5 பேர் பெயரில் உள்ளது. அவர்கள் யார் என்றால் லட்சுமிநாராயணன், விநாயகம், கஜவள்ளி, பார்வதி, கலைச்செல்வி ஆவார்கள். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதினால் தான் 5 நபர்களின் பெயர்கள் பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் முதல் முறையாக எப்போது பாகப்பிரிவினை வேண்டி அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் 2017 ல் அனுப்பிய அறிவிப்பில் யார் யார் சேர்ந்து அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் நானும் 1 ம் பிரதிவாதி பார்வதியும் சேர்ந்து தான் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் 7 வது பிரதிவாதி சந்திரசேகரை எனக்கு தெரியுமா என்றால் அவர் எனது பெரிய அண்ணனின் மகன் ஆவார். அவருக்கும் எனக்கும் 2017 க்கு முன்பாக எந்த பிரச்சனையும் இல்லை பேச்சுவார்த்தை உண்டு. அவரது வீட்டிற்கு அவ்வபோது செல்வது வழக்கமா என்றால் சரிதான். நான் 2017 ம் ஆண்டு அனுப்பிய அறிவிப்பை 7 ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ல் 2 வது நபராக சேர்க்கப்பட்டுள்ள பெயர் என்னவென்றால் சந்திரசேகர் ஆகும். நான் முன்னுக்கு பின் முரனாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வா.சா.ஆ.5 குறித்த ரசீதோ அல்லது அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையோ அல்லது நான் அனுப்பி திருப்பப்பட்ட அறிவிப்பின் உறையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

நான் 2 வது முறை பாகப்பிரிவினை வேண்டி அறிவிப்பு அனுப்பினேனா என்றால் 2019 ம் ஆண்டு அனுப்பினேன். நான் 2019 ல் அனுப்பிய அறிவிப்பில் யார் யார் சேர்ந்து அறிவிப்பு அனுப்பினோம் என்றால் நான் மட்டுமே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ல் நானும் 1 ம் பிரதிவாதி பார்வதியும் சேர்ந்து தான் அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் 2019 க்கு முன்பாக எந்த பிரச்சனையும் இல்லை பேச்சுவார்த்தை உண்டு. அவரது வீட்டிற்கு அவ்வபோது செல்வது வழக்கமா என்றால் சரிதான்.

நான் 2019 ம் ஆண்டு அனுப்பிய அறிவிப்பை 7 ம் பிரதிவாதிக்கு நான் அனுப்பினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 ல் 2 வது நபராக சேர்க்கப்பட்டுள்ள பெயர் என்னவென்றால் சந்திரசேகர் ஆகும். நான் முன்னுக்கு பின் முரனாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வா.சா.ஆ.7 குறித்த ரசீதோ அல்லது அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையோ அல்லது நான் அனுப்பி திருப்பப்பட்ட அறிவிப்பின் உறையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் வாதி நான் மட்டும் தான் என்றால் சரிதான். நானும் 1 ம் பிரதிவாதியும் சேர்ந்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு வழக்கினை ஏன் சேர்ந்து தாக்கல் செய்யவில்லை என்றால் 1 ம் பிரதிவாதியாகி பார்வதிக்கு உடல் நிலைய சரியில்லாத காரணத்தினால் நானே வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 – 5 வரிசைகளில் நான் சந்திரசேகர் என்பவருக்கு அனுப்பிய அறிவிப்பு Left என திருப்பப்பட்டதற்காக உறை என்றால் சரிதான். 7 ம் பிரதிவாதி சந்திரசேரை எனக்கு நன்கு தெரிந்திருந்தும் அவர் இல்லாத முகவரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்து நான் எதை வைத்து உரிமையளார் என் கோருகிறேன் என்றால் 7 ம் பிரதிவாதியின் தந்தையின் சகோதரி என்ற காரணத்தினாலும் என்னுடைய தந்தையுடைய சொத்து என்ற காரணதினாலும் நான் உரிமைகோருகிறேன். இதை தவிர்த்து தாவா சொத்திற்கு நான் தான் உரிமையார் கோருவது குறித்து ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாய்மொழியாக என்னுடைய தந்தை தாவா சொத்தில் எனக்கும் என்னுடைய

சகோதரிகளுக்கும் உரிமையுள்ளதாக தெரிவித்த விவரத்தை தெரிந்துக்கொண்டேன்.

(பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**